# கலாதீபம்

කලාදීපම්

KALADEEPAM

ஸ்தாபிதம் 2020 | 01.09.2023 – 30.09.2023 | தீபம் 16


## நூற்றாண்டு காணும் கலாசாலையின் ஆங்கிலதின விழாவில் பரீட்சை ஆணையாளர் திருமதி எம்.ஜீவராணிபுனிதா பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார்



கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டு கால ஆங்கில தின விழா 22.09.2023 வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை சிறப்பாக நடைபெற்றது.

கலாசாலையின் அதிபர் ச.லலீசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை பரீட்சை திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளர் திருமதி எம்.ஜீவராணிபுனிதா அவர்கள் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினராக, பலாலி ஆசிரியர் கலாசாலையின் முன்னாள் அதிபரும், ஆங்கிலத்துறை ஆசானுமாகிய கவிஞர் சோ பத்மநாதன் அவர்கள் கலந்து கொண்டார்.

கௌரவ விருந்தினராக பலாலி மற்றும் கோப்பாய் ஆசிரிய கலாசாலைகளின் ஆங்கிலத் துறை முன்னாள், சிரேஸ்ட விரிவுரையாளர் திருமதி எம்.ஜே.எஸ் முத்துக்குமாரசாமி அவர்கள் கலந்து கொண்டார்.




கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முன்னாள் அதிபர் வே.கா.கணபதிப்பிள்ளை அவர்களும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி பீடாதிபதி, திரு சு.பரமானந்தம் மற்றும் ஆங்கிலதுறை விரிவுரையாளர்களான திரு எஸ். முகுந்தன் மற்றும் திரு எஸ்.பற்றிக் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.




இந்நிகழ்வுகளை ஆங்கில மன்ற பொறுப்பு விரிவுரையாளர் செல்வி வசந்தி வயித்திலிங்கம் நெறிப்படுத்தினார். இந்நிகழ்வில் ஆங்கில தினத்தையொட்டி நடத்தப்பட்ட, போட்டிகளில் முதலிடம் பெற்ற ஆற்றுகை நிகழ்வுகள் மேடையேற்றப்பட்டன. போட்டிகளில் வெற்றி ஈட்டியவர்களுக்கான பதக்கங்களும், சான்றிதழ்களும், விருந்தினர்களால் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

## கலாதீபக் குழுமம்

**காப்பாளர்**
திரு சந்திரமௌலீசன் லலீசன்
அதிபர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை

**பிரதம ஆசிரியர்**
செல்வி தர்ஷினி முத்துராஜா
விரிவுரையாளர், காப்பாளர் ஊடகக்கழகம்

**வள ஆலோசனை**
திரு கணபதிப்பிள்ளை செந்தில்குமரன்
பிரதி அதிபர்

தங்கராஜா கோபாலகிருஷ்ணன்
பிரதி அதிபர்

திருமதி சத்தியா ரஞ்சித்
உபஅதிபர்

**ஆசிரியர்கள்**
செல்வி மாலதி பத்மநாதன்
விரிவுரையாளர்

திரு வேலும்மயிலும் நந்தகுமார்
விரிவுரையாளர்

செல்வி சுஜீவா அருள்லிங்கம்
விரிவுரையாளர்

**பட ஒருங்கிணைப்பு**
தங்கன் இன்பதாஸ்
ஆசிரியமாணவன் - உடற்கல்வி (2021/2022)

செல்வநாயகம் கஜந்தன்
தொழில்நுட்ப உதவியாளர்

கலாதீபத்தில் வெளிவரும் ஆக்கங்களுக்கு அவற்றை எழுதியவர்களே பொறுப்புடையவராவார். ஆக்கங்களில் வெளியிடப்படும் கருத்துக்கள் கலாசாலையின் கருத்துக்களாக கொள்ளப்படமாட்டா.

**வெளியீடு**
கோப்பாய் ஆசிரியர் கலாசாலை
இருபாலை கோண்டாவில் வீதி,
இருபாலை.
தொலைபேசி: 0212230323

**மின்னஞ்சல் முகவரி**
kaladeepam.ktc@gmail.com


## பாரதியாரின் கொள்ளுப் பேரனுக்கு கலாசாலையில் வரவேற்பு

பாரதியாரின் கொள்ளுப்பேரனும் பொறியியலாளரும் பிரபல கர்நாடக இசைப் பாடகருமாகிய டாக்டர் ராஜ்குமார் பாரதி 07.09.2023 அன்று கலாசாலைக்கு வருகை தந்தார். அவருடன் கொழும்பின் பிரபல நடன ஆசிரியர் திவ்யா சுஜேன் அவர்களும் வருகை தந்தார்.

அவரது யாழ்ப்பாண வருகைக்கான வரவேற்பு நிகழ்வு கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் இடம்பெற்றது. இந்நிகழ்வை விரிவுரையாளர் வேல் நந்தகுமார் முன்னிலைப்படுத்தினார். அதிதி அறிமுக உரையினை விரிவுரையாளர் கு.பாலசண்முகன் ஆற்றினார்.

கலாசாலையின் அதிபர் பிரதி அதிபர்கள் உள்ளிட்ட சமூகத்தினர் ராஜ்குமார் பாரதிக்கான கௌரவத்தையும் யாழ்ப்பாண வருகையை அடையாளப்படுத்தும் நினைவுச் சின்னத்தையும் வழங்கி கௌரவித்தனர்.

ராஜ்குமார் பாரதி - தனது உரையின்போது பாரதியார் பாடல்களை தனது இனிய குரலில் பாடியும் இளம் தலைமுறையினரிடையே பாரதியாரின் கருத்துக்களை கொண்டு சேர்ப்பதற்கான உத்திகள் பற்றியும் விளக்கிக் கூறினார்.







# கலாதீபம்

කලාදීපම KALADEEPAM

கலாதீபம் – மின்சஞ்சிகை – கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஊடகக் கழக வெளியீடு

කලා දීපම , e - සඟරාව, කෝප්පායි ගුරු විද්‍යාලයීය මාධ්‍ය සංගමයේ ප්‍රකාශනයකි.

The Kaladeepam - e magazine - published by media club of Kopay Teachers' College


## நமது நோக்கு

### நூற்றாண்டுப் பெருமிதம்

கோப்பாய் ஆசிரிய கலாசாலை 01.10.2023 அன்று நூற்றாண்டு நிறைவைக் காண்கிறது. இலங்கையில் தற்போது உள்ள எட்டு ஆசிரிய கலாசாலைகளுள்ளும் மூத்ததும் முதன்மைவாய்ந்ததும் என்ற மகுடத்தை இக்கலாசாலை தனதாக்கிக் கொண்டுள்ளது. அண்மையில் (07.08.2023) வருகை தந்த கல்வி அமைச்சின் ஆசிரிய கல்விக்கான பிரதம ஆணையாளர் மற்றும் ஆசிரிய கல்விக்கான பணிப்பாளர் எழுத்தில் பதிவு செய்த உன்னதம் இதுவாகும்.

ஆசிரியர்களாக தொழில்சார் நிலையில் பயணிப்பவர்கள் தமது வாழ்க்கையின் ஒரு கட்டத்தில் கலாசாலையை நாடி தொழில்சார் கல்வியைப் பயில்வதற்கான வாய்ப்பு உள்ளது. பல்கலைக்கழக உருவாக்கத்திற்கு முன்னர் கல்விக்கான உயர் ஸ்தானமாகக் கலாசாலைகளே விளங்கியிருக்கின்றன.

ஆசிரிய கலாசாலைகளில் காலத்திற்கேற்ற மாற்றங்கள் நீண்டகாலமாக மேற்கொள்ளப்படவில்லை. 2009 இற்குப் பின்னர் கலைத்திட்ட உள்ளடக்கத்தில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படவில்லை. இலங்கையில் கல்வி குறித்துத் தெளிவான ஒரு பார்வை இல்லாமை ஆசிரியர் கல்வியிலும் பல பின்னடைவுகளை ஏற்படுத்துகின்றது. மாறிவரும் அரசுகள் தமக்கு ஏற்றாற் போலக் கொள்கைகளை வகுக்கின்றமையும் இப்பின்னடைவுக்கான காரணங்களுள் ஒன்றாகும்.

இலங்கையில் நிலையான கல்விக் கொள்கை ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும். ஆசிரியர் கல்வி குறித்துத் தெளிவான பார்வை வகுக்கப்பட வேண்டும். ஆசிரிய கலாசாலைகளுக்குரிய கல்விசார் கட்டமைப்பும் சமகாலக் கல்விப் போக்குகளுக்கு ஏற்றாற்போல் இற்றைப்படுத்தப்பட வேண்டும்.

இவை முறையாக நடைமுறைப்படுத்தப்படுமானால் நூறென்ன நூறாயிரம் ஆண்டுகளுக்குக் கலாசாலைகள் வாழும்.

அதிபர்

## கலாசாலையின் கிருஷ்ணை படிப்பகத்திற்கு ஒரு தொகுதி நூல்கள் அன்பளிப்பு

ஓய்வு பெற்ற ஆசிரியரும் சமூக ஆர்வலரும் கலாசாலையின் அயலவருமான திரு சின்னத்துரை பாலசுப்பிரமணியம் அவர்கள் சிவாஜி கணேசன் பற்றி முனைவர் கா.வெ.செ மருதுமோகன் எழுதிய ஆய்வு நூல் மற்றும் கண்ணதாசனின் அர்த்தமுள்ள இந்துமதம் முழுமையான தொகுதி, மற்றும் சில நூல்கள் அடங்கிய பொதியை நூலக அபிவிருத்திக் குழு அங்கத்தவர்களான விரிவுரையாளர்கள் செல்வி தர்ஷினி முத்துராஜா மற்றும் திரு வேல் நந்தகுமார் ஆகியோரிடம் கையளித்தார்.







# News in Brief - Month of September

**06.09.2023**

**Wednesday Assembly**

It was held on Wednesday at Rathilakshmi Hall under the leadership of Mr. S. Laleesan, started at 8:30 am. The event was conducted by second year Tamil, Maths, Christianity, Commerce Courses, The event was moderated by Mrs. T. Kalpana, teacher trainee second year commerce.

Guest speaker P. Kajadeepan, the 2012/2013 batch Sociology student of KTC and a former member of the North Provincial Council. He Addressed about the contribution of the teachers in the Politics.

Mr. T. Robert Suresh 2nd year Tamil Course who delivered the introductory speech.

**06.09.2023**

International Literacy Day 08.09.2023 Special Speech delivered by S. Gajaraj, Teacher trainee of 2nd year mathematics course.

Mr. Sinnathurai Balasubramaniam, a retired teacher, social activist and neighbor of KTC, attended as a special guest.

Deputy Principal Mr. T. Kopalakrishnan delivered the introductory speech regarding the special guest.

Mr Sinnathurai Balasubramaniam Retired Teacher Handed over a research book written by Dr. K.V.S. Marudu Mohan on Sivaji Ganesan and Kannadasan's “Arttamulla Inthumatam” complete volume, along with some other books were presented to lecturers Ms. Dharshini Muthurajah and Mr. Vel Nandakumar members of the College Kirushnai Library Development Committee.

**07.09.2023**

**Bharatiyar's great-grandson Visited to Kopay Teachers’ College**

It was held on under the leadership of the Principal Mr. S. Laleesan. Bharatiyar's great-grandson and Engineer Dr. Rajkumar Bharati, famous Carnatic music singer, graced the occasion.He was accompanied by Colombo's famous dance teacher Divya Sujan.

Lecturer K. Balasanmugan delivered the introductory speech. He community including the principal and vice principals of the college honored Rajkumar Bharati with a memento marking his visit to Jaffna.

Rajkumar Bharti - During his speech he sang Bharatiyar songs in his melodious voice and also explained the strategies to bring the ideas of Bharatiyar to the young generation.

**14.09.2023**

**Wednesday Assembly**

It was held on Wednesday at Rathilakshmi Hall under the leadership of Mr. K.Senthilkumaran, started at 8:30 am. The event was conducted by First year Primary, Special Edu. 2NL, Courses. The event was moderated by Mrs. Puthika teacher trainee First year 2 NL Tamil.

Mrs. Asmita Begum, First Year Special Education teacher trainee delivered a student speech on UN Day.

The senior Lecturer Mrs. Sivalosani Surendran Delivered the introductory speech about the chief Guest.

Guest speaker Ms. Kothi Nakularaja (LLB) Former Lecturer of Palali Teachers’ College. Delivered a talk about Teacher Profession.

**20.09.2023**

**Wednesday Assembly**

It was held on Wednesday at Rathilakshmi Hall under the leadership of Mr. S. Laleesan, started at 8:30 am. The event was conducted by First year English Course, The event was moderated by Mrs. Mohamed Fathima Risrina. Mrs. Mekhila Umasuthan, Development Officer of the College, gave the introductory speech about the guests.

Guest speaker Former Vice Principal of the College (1997) Ms. Vijayarani Velupillai participated.

Savureen Fathima Risrina a first year English teacher student, gave a speech to the students on World Peace Day.

**22.09.2023**

**The Annual English Day Celebration—2023**

In this event, which was held under the chairmanship of the Principal Mr. S. Laleesan,

Mrs. M Jeevaranipunitha, the Commissioner of Examinations of the Sri Lankan Examination Department, was the Chief Guest.

Poet S.Pathmanathan,(So Pa) Principal Emeritus of Palaly Teachers’ College participated as the special guest.

Mrs. M.J.S. Muthukumarasamy, Former Lecturer, English, Palali and Kopay Teachers’ Colleges participated as the Guest of honor.

The former Principal of Kopay Teachers’ College V..K. Kanapathipillai, The President of National College of Education, Jaffna, Mr. S. Paramanandham and the English lecturers, Mr. S. Mukunthan and Mr. S. Patrick also graced the occasion.

**27.09.2023**

**Wednesday Assembly**

It was held on Wednesday at Rathilakshmi Hall under the leadership of Mr. S. Laleesan, started at 8:30 am. The event was conducted by second year Second year Physical Education A Course.

The event was moderated by Ms. Vadana Sivasambu. introductory speech delivered the by lecturer of the college Mr Vel Nandakumar.

Guest speaker Prof. Dr S. Sivalingaraja, Former Head of Department of Tamil, University of Jaffna participated.

Ms Sarukesi Nirojan, a second year student of Physical Education, delivered a student speech on physical health.

# புதன் 06.09.2023 ஒன்றுகூடலில் அதிதிப் பேச்சாளராக திரு பா கஜதீபன் ஆசிரியர் அவர்கள்(ஆசிரியமாணவன் 2012/13), முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் ~ கலந்து சிறப்பித்தார்

**அரசியலில் பங்களித்த ஆசிரியப் பெருமக்கள்**

புதன்கிழமை ஒன்றுகூடலின் செப்ரெம்பர் மாதத்துக்குரிய முதலாவது உரையாளராக கலாசாலையின் பழைய மாணவனும் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினருமாகிய திரு. பா. க ஜதீபன் அவர்கள் 06.09.2023 அன்று நடைபெற்ற ஒன்றுகூடலில் அதிதி பேச்சாளராக கலந்து சிறப்பித்தார். இவர் 2012/13 அணியின் சமூகவியல் பாடத் துறை ஆசிரிய மாணவரா வார்.முன்னதாக இவர் பற்றிய அறிமுக வுரையை இரண்டாம் வருட தமிழ்நெறி ஆசிரிய மாணவன் தே.சுரேஸ் அவர்கள் நிகழ்த்தினார். 05.09.2023 சர்வதேச எழுத்தறிவு தினம் பற்றிய சிந்தனையை கணித நெறியைச் சேர்ந்த கஜராஜ் உரையாக முன் வைத்தார்.

கஜதீபனின் உரை அரசியலில் பங்களித்த ஆசிரியப் பெருமக்கள் என்ற பொருளில் மிக நீண்ட ஆய்வுத் தேடலுடன் முன் வைக்கப்பட்ட ஓர் உரையாக அமைந்தது. அவ்வுரையில் க.பொ.இத்தினம், அடக்காத் தமிழன் சுந்தரலிங்கம், உடுப்பிட்டி சிங்கம் சிவசிதம்பரம், வி.பொன்னம்பலம், ஆனந்தசங்கரி, சிறீதரன் எனப் பலரை எடுத்துக்காட்டி ஒரு வரலாற்று ஓட்டமாக அரசியலில் பிரவேசித்த ஆசிரியர்கள் அவர்களது செல்வாக்கு, அரசியலில் அவர்களது சாதனைகள் எனப் பல விடயங்களை எடுத்துக் காட்டிப் பேசினார். அவ்வுரையில் அவரே குறிப்பிட்டது போல் சில விடுபடல்கள் இருந்த போதும் அவ்வுரை ஒரு புதிய கோணச் சிந்தனையில் அமைந்து சிறப்புப் பெற்றது. அவ்வுரை இன்னும் விரிவான ஆய்வுத் தேடலுடன் எழுதப்பட வேண்டிய ஒரு கட்டுரை என்பதில் ஐயமில்லை.

கலாசாலையின் அதிபர் மற்றும் முகாமைத்துவ குழுவினர் பொன்னாடை அணிவித்து கௌரவித்தனர் நிறைவுரையினை கலாசாலையின் அதிபர் அவர்கள் ஆற்றினார்.











# புதன் 14.09.2023 ஒன்றுகூடலில் அதிதிப் பேச்சாளராக திருமதி கோதை நகுலராஜா (SLEAS) சட்டத்தரணி முன்னாள் பலாலி ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் கலந்து சிறப்பித்தார்

புதன்கிழமை ஒன்றுகூடலில் செப்ரெம்பர் மாதத்துக்குரிய இரண்டாவது உரையாளராக பலாலி ஆசிரிய கலாசாலையின் முன்னாள் விரிவுரையாளரும் கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்த திருமதி கோதை நகுலராஜா அவர்களின் உரையாகும்.

அவர் தனது உரையில் “ அறிவிப்பாளர் எனும் போது தொனி மற்றும் உச்சரிப்பு என்பவற்றில் கூடிய கவனம் செலுத்தவேண்டும். பத்திரிகை வாசித்தல், நேரடி வர்ணனை, மேடைப் பேச்சு, வர்ணனை தொகுப்பு என்பன வெவ்வேறு வகையான தொனிகளைப் பயன்படுத்தவேண்டும். இவை எல்லாவற்றையும் ஒரே தொனியில் மேற்கொள்வது சிறப்பானதல்ல. அறிவிப்பாளர்கள் பல்துறைசார்ந்த ஆற்றலுடையவர்களாக இருக்க வேண்டும்’’ .எனக் கூறினார்.

இந் நிகழ்வு பிரதி அதிபர் செந்தில்குமரன் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் அதிதி அறிமுக உரையை கலாசாலையின் சிரேஸ்ட விரிவுரையாளர் திருமதி சிவலோசனி சுரேந்திரன் அவர்கள் நிகழ்த்தினார். நிகழ்வில் ஐ.நா சபை குறித்த ஆசிரிய மாணவர் உரையை முதலாம் வருட விசேட கல்வி ஆசிரிய மாணவி திருமதி. அஸ்மிதா பேகம் நிகழ்த்தினார். முதலாம் வருட இரண்டாம் மொழி தமிழ் பாடநெறியைச் சேர்ந்த திருமதி புத்திகா அவர்கள் நிகழிச்சிகளை தொகுத்து வழங்கினார்.

அதிதிப் பேச்சாளர் தனது உரையில் அழைப்புக்கு நன்றி தெரிவித்ததுடன் தனது கடந்த கால கலாசாலை வாழ்வை நினைவு கூர்ந்ததுடன் ஆசிரியர்களுக்கு இருக்கும் சமகால சவால்களை எடுத்துக்கூறி குறிப்பாக ஆசிரியர் மும்மொழிப் புலமை மிக்கவர்களாக இருந்தால் பெறக்கூடிய அனுகூலங்களை தன் வாழ்வு அனுபவம் வழி எடுத்துக் கூறினார்.
கலாசாலையின் பிரதி அதிபர் மற்றும் கலாசாலை விரிவுரையாளர்கள் பொன்னாடை அணிவித்து கௌரவித்தனர். நிறைவுரையினை கலாசாலையின் பிரதி அதிபர் அவர்கள் ஆற்றினார்.









# புதன் 20.09.2023 ஒன்றுகூடலில் அதிதிப் பேச்சாளராக செல்வி விஜயராணி வேலுப்பிள்ளை முன்னாள் உபஅதிபர் கலந்து சிறப்பித்தார்

**இன்றைய ஆசிரியர்கள் எதற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்?**

புதன் கிழமை ஒன்று கூடலின் மூன்றாவது வாரத்திற்குரிய உரையினை எமது கலாசாலையின் ஓய்வு நிலை மனைப்பொருளியல் பாட விரிவுரையாளரும் உப அதிபருமாகிய செல்வி விஜயராணி வேலுப்பிள்ளை அம்மா அவர்கள் ஆற்றினார். முன்னதாக அவர் குறித்த அறிமுகவுரையை எமது கலாசாலையின் கற்பித்தல்சார உத்தியோகத்தர் திருமதி மேகலா உமாசுதன் அவர்கள் வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து மிக நீண்ட இடைவெளிக்குப் பின் கலாசாலைச் சமூகம் விடுத்த வேண்டுகோளை ஏற்று ஈருருளியில் தனது 82 ஆவது வயதில் கலாசாலைக்கு வந்த உப அதிபர் வேலுப்பிள்ளை அம்மாவுக்குரிய கௌரவிப்பு இடம்பெற்றது. முதலில் ஆசிரிய மாணவர்களிடம் ஒரு வினாவை எழுப்பி அவர் தனது உரையை ஆரம்பித்தார்.

" இங்கிருப்பவர்களில் எத்தனை பேர் ஆசிரியத் தொழிலுக்கு மன விருப்பதோடு வந்திருக்கின்றீர்கள்?" என்பதே அந்த வினா.

பின்னர் சமகாலத்தில் ஆசிரியர்கள் பலர் சேவையை பின்தள்ளி சம்பளத்தை முதன்மைப் படுத்துவதை எடுத்துக் காட்டி அப்போக்குத் தவறானது என்பதைச் சுட்டிக் காட்டினார்.

அத்துடன் தனியார் கல்வி நிலையத்தை மாணவர் நாடாமல் பாடசாலையில் ஆசிரியரை நம்பி வரும் மாணவர்களது வாழ்வை முன்னேற்ற வேண்டும். பெற்றோரைக் காட்டிலும் மாணவரை உயர வைப்பவர்கள் ஆசிரியர்களே. ஆசிரியர்கள் பயிற்சியை பெற்றே ஆசிரியத் தொழிலுக்கு வரவேண்டும் எனவும் தெரிவித்தார்.

கலாசாலையின் அதிபர் மற்றும் முகாமைத்துவ குழுவினர் பொன்னாடை அணிவித்தும் நினைவுச் சின்னம் வழங்கியும் கௌரவித்தனர்.

நிறைவுரையினை கலாசாலையின் அதிபர் அவர்கள் ஆற்றினார்.









# புதன் 27.09.2023 ஒன்றுகூடலில் அதிதிப் பேச்சாளராக பேராசிரியர் கலாநிதி சி.சிவலிங்கராஜா மேனாள் தமிழ்துறைத் தலைவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கலந்து சிறப்பித்தார்

**என்னுடைய வாழ்க்கையின் ஒரே இலட்சியமாக இருந்தது நான் ஒரு பயிற்றப்பட்ட தமிழாசிரியனாக வரவேண்டும் என்பதேயாகும்.**

**நான் பாடசாலை மாணவனாக இருந்தபோது விரும்பியதும் அதுவேயாகும். அதுவே எனது இலட்சியமாகவும் இருந்தது. அதை நோக்கித்தான் எனது பயணமும் இருந்தது.**

இவ்வாறு தெரிவித்தார் பேராசிரியர் சி.சிவலிங்கராஜா.

புதன் கிழமை ஒன்று கூடலின் நான்காவது வாரத்திற்குரிய உரையினை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மேனாள் தமிழ்துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி சி.சிவலிங்கராஜா **பயிற்றப் பட்ட ஆசிரியர்களின் மகத்துவம்** என்னும் தலைப்பில் நிகழ்த்தினார்.

அவர் தனது உரையில் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20ஆம் நூற்றாண்டின் மூன்றாம், நான்காம் தசாப்தம் வரையான காலத்தில் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளரகள் பேராசிரியர்கள் என்றே அழைக்கப்பட்டனர் எனக் குறிப்பிட்டார். மேலும் இங்கே பயிற்சி பெறுகின்ற ஆசிரியர்கள் பயிற்சி பெற்று முடிந்ததும் உன்னதமான ஆசிரியராக உருவாவர் என்றார். உங்களுக்கு நிகரானவர்கள் நீங்கள் தான் என்று குறிப்பிட்டதுடன் அக் காலத்தில் வேட்டியும் நஷனலும் சால்வையும் தான் ஒரு தமிழாசிரியரின் அடையாளமாக காணப்பட்டது என்றார். ஆசிரியர்கள் மாணவர்கள் மீது பற்று வைத்து கற்பித்தார்கள் எனவும் குறிப்பிட்டார்.

ஆசிரியப் பணி என்பது மிக உயர்ந்தது. ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் சேவையாற்ற வேண்டும். கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் பயின்றோம் என யாழ் மாவட்டத்திற்கு வெளியேயேயும் அடையாளத்தை பதிக்கவேண்டும். வீரமணி ஐயர் போன்ற பல அறிஞர்களது பாதம்பட்ட பெருமைக் குரியது இக்கலாசாலையாகும். இங்கு பணியாற்றிய அதிபர்கள் உலகப் புகழ்பெற்றவர்கள் என தனது சிறப்புரையினை ஆற்றினார் பேராசிரியர்.

இரண்டாம் வருட உடற்கல்விநெறி A ஆசிரிய மாணவர்கள் இந்நிகழ்வை முன்னெடுத்துச் சென்றனர். செல்வி வனிதா சிவசம்பு தலைமையேற்று நடத்தினார். இரண்டரம் வருட உடற்கல்விநெறி ஆசிரியமாணவி திருமதி சாருகேசி நிரோஜன் உடல் ஆரோக்கியம் பற்றிய மாணவர் உரையினை ஆற்றினார். அதிதி அறிமுக உரையினை கலாசாலையின் விரிவுரையாளர் வேல் நந்தகுமார் ஆற்றினார்.

கலாசாலையின் அதிபர் மற்றும் முகாமைத்துவ குழுவினர் பொன்னாடை அணிவித்து கௌரவித்தனர் நிறைவுரையினை கலாசாலையின் அதிபர் அவர்கள் ஆற்றினார்.









# ஐக்கிய நாடுகள் சபை



**திருமதி அஸ்மிதா பேகம்**

**முதலாம் வருட விசேட கல்விநெறி**

அமைதி என்பது கட்டாயத்தினால் ஏற்படுத்திவிட முடியாது. ஒருவருக்கொருவர் புரிந்து கொள்வதன் மூலமே ஏற்பட முடியும். அமைதியாக உதித்து அமைதியாக மறைகிறது சூரியன். மலர்களின் வாசத்தை ஊர் முழுவதும் பரப்பிவிட்டு அமைதியாக இருக்கின்றது தென்றல். இயற்கையுடன் நிலவும் இந்த அமைதி உலகத்தில் அனைத்து மனிதர்களுக்கிடையும் இருக்க வேண்டும். அந்த வகையில் யுத்தங்களைத் தடுத்து சமாதானத்தை நிலை நாட்ட உருவாக்கப்பட்ட அமைப்பே இந்த ஐக்கிய நாடுகள் சபையாகும். 1945 அக்டோபர் மாதம் 24 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது. 1948 ஆம் ஆண்டு முதல் ஐக்கிய நாடுகள் தினம் கடைபிடிக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் உலகளாவிய ரீதியில் பல நாடுகளில் வேர்விட்டு பரந்து காணப்படும் மிகப்பெரிய சர்வதேச அமைப்பாகும். உலகத்தையே கைக்குள் வைத்திருக்கும் ஒரு மிகப்பெரும் சக்தி கொண்ட சர்வதேச அமைப்பாக இதனைக் கொள்ளலாம்.

ஐக்கிய நாடுகள் சபையின் முக்கிய நோக்கம் என்னவென்றால் ஐக்கிய நாடுகளின் நோக்கங்களையும், சாதனைகளையும் உலகெங்கும் எடுத்துக் கூறுவது ஆகும். ஐக்கிய நாடுகள் சபையிலே 193 நாடுகள் அங்கம் வகிக்கின்றது. இரண்டாம் உலகப்போரில் ஏற்பட்ட அழிவு காரணமாக அப்போரைத் தடுக்கும் நோக்குடன் சில உலகத் தலைவர்கள் இணைந்து சமாதானத்தை நிலை நாட்டவும், யுத்தங்களைத் தடுக்கும் நோக்குடனும் உருவாக்கப்பட்ட சபையாகும்.

ஆரம்பத்தில் இவ்வமைப்புக்கு அஸ்திவாரம் இட்ட பிரிட்டன், ரஷ்யா, பிரான்ஸ் , அமெரிக்கா, சீனா ஆகிய ஐந்து நாடுகளும் பாதுகாப்புக்குரிய நிரந்தர உறுப்பு நாடுகள் ஆகும். உலக சமாதானம் , சமூக முன்னேற்றம் ஆகியவற்றை கருதி சுய விருப்பத்தின் அடிப்படையில் ஒன்று சேர்ந்த ஒரு தனித்துவமான அமைப்பாகும். ஐக்கிய நாடுகள் என்பது அதில் அங்கம் வகிக்கும் அனைத்து உறுப்பு நாடுகளையும் பிரதிநிதித்துவம் செய்யும் அமைப்பாகும். இதன் தலைமையகம் அமெரிக்காவின் நியுயோர்க் நகரில் அமைந்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை சிறுவர்களைப் பராமரிக்கும் யுனிசெப் நிறுவனம் , அகதிகளைப் பராமரிக்கும் நிறுவனம் , மேம்பாட்டுத் திட்டங்களுக்கான நிறுவனம் , மக்கள் தொகை நிதியகம் என சர்வதேச உதவி வழங்கும் பல அமைப்புகளை உருவாக்கியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் முக்கிய நோக்கங்களாக :

01 .உலக நாடுகளுக்கு இடையே நல்லுறவை ஏற்படுத்துதல்.

02. பொருளாதார சமூக பண்பாடு மற்றும் மனித ஒத்துழைப்பு வழங்கல்.

03. சுதந்திரம் மற்றும் உரிமைகளை மதித்து அவற்றிற்கு ஆதரவளித்தல் ஆகும்.

ஐக்கிய நாடுகள் சபையிலே ஆறு முக்கிய உறுப்புக்கள் உள்ளன.

1. பொதுப் பேரவை.
2. பாதுகாப்பு மன்றம்.
3. பொருளாதார மற்றும் சமுதாய மன்றம்.
4. தர்மகர்த்தா மன்றம்.
5. உலக நீதிமன்றம் .
6. செயலகம்.

15 பிரதிநிதித்துவ மன்றங்களும் இவை எல்லாவற்றுக்கும் மேலாக பொதுவான பல்வேறு இதர அமைப்புகள் உலகமெங்கும் நிற்கின்றன. ஐக்கிய நாடுகள் சபையின் நோக்கங்களும் திட்டங்களும் உலகளாவியவை. ஐக்கிய நாடுகள் சபையும் வருமானம் என்பது அதன் உறுப்பு நாடுகள் செலுத்தும் தொகையாகும். உலகத்தின் சமாதானத்திற்காகவும் மனித உரிமைகளுக்காகவும் ஐக்கிய நாடுகள் ஆற்றும் சேவை அளப்பரியது. எனினும் எல்லா நாடுகளின் மக்களையும் சமமாக மதித்து பாதுகாக்க வேண்டிய பொறுப்பு ஐக்கிய நாடுகள் சபைக்கு உண்டு. அதுவே அனைத்து நாட்டு மக்களின் கோரிக்கையாகும். அனைவரும் உலக சமாதானத்தை மனதில் வைத்து மகிழ்வுடன் வாழ்வோம்.

# கற்றல் சூழலும் ஆசிரியரும்

கற்றல் - கற்பித்தல் செயன்முறையில் மிகவும் செல்வாக்கு செலுத்துவது கற்றல் சூழலாகும். கற்றல் சூழலை முகாமை செய்வதில் தான் ஆசிரியரின் வெற்றி தங்கியுள்ளது. நவீன கற்றல் - கற்றபித்தல் எண்ணக்கருக்களில் மாணவர் மையத்தில் இருந்து கற்றல் மையம் முக்கியத்துவம் பெறுகிறது. இந்நிலையானது கற்றல் செயன்முறை ஆசிரியரின் கைக்குள் அடங்காது வெளிப்பட்டு நிற்கும் ஒரு நிலையாகும். கற்றல் மையத்தில் ஆசிரியர் கற்றலுக்கு வசதி செய்பவர் எனும் வகிபாகத்தை ஏற்கவேண்டி உள்ளது. இங்குதான் கற்றல் சூழலின் செல்வாக்கு குறித்து அதிகம் சிந்திக்க வேண்டியுள்ளது.

கல்வியில் சமவாய்ப்பு என்பது கற்றல் மையத்தில் சமமும் சமாந்தரமும் அற்ற ஒன்றாகவே காணப்படுகிறது. இதற்கு காரணம் கற்றல் சூழலாலும் யார் யாருக்கு குடும்பம், சமூகம், பொருளாதாரம், குடும்பம்ப கல்வி அறிவு என்பன வசதியாக உள்ளதோ அது வாய்ப்பாகவும் இல்லாவிட்டால் அது வாய்ப்பற்தாகவும் இருக்கும்.. கற்றல் சூழல் மூன்று பிரதான கூறுகளை கொண்டமைந்துள்ளது.

1. பௌதீக சூழல்
2. உடல், உள சூழல்
3. சமூக சூழல்

இச்சூழல்களை கற்பதற்கான அனுகூலமான சூழலாக மாற்றியமைப்பது ஆசிரியரின் கடமையாகும். அதற்கூடாகவே கற்றலுக்கு வசதியளிப்பவர் என்ற வகிபாகத்தை ஆசிரியர் நிறைவேற்ற முடியும்.கற்றல் சூழலை வடிவமைப்பதில் வகுப்பறை முகாமைத்துவம் வெற்றி பெறும். கற்றல் சூழலில் காணப்படும் பௌதீக சூழல் எனும் போது பாடசாலை அதன் அமைவிடம், காற்று, வெளிச்சம், கவிவுநிலை, கற்பித்தல் சாதனங்கள் என்பனவும் உடல் உள சூழல் எனும் போது மாணவரின் போசாக்கு, நோய் நிலைமை, விசேட தேவைகள்,
உள விருப்ப வெறுப்புகள் போன்றவற்றையும் சமூக சூழல் எனும் போது குடும்ப நிலை, வாழும் சூழல், சமய நிலை, சகபாடிகள், குடும்ப கல்வியறிவு, பொருளாதார நிலை போன்ற இன்னோரன்ன விடயங்களையும் கூறமுடியும். மேற்படி கற்றல் சூழலில் காணப்படும் பிரச்சினைகள் மாணவரது கற்றலில் தாக்கம் செலுத்துவதை நாம் உணரமுடியும். வசதி வாய்ப்பற்ற பிள்ளைகள் எதிர் கொள்ளும் பிரச்சனைகள் அனைத்தும் அவர்களது கற்றல் சூழலாகும்.

இந்நிலையில் கற்றல் மையத்தில் கற்றல் சூழலை முகாமை செய்து வசதிப்படுத்துனர் எனும் வகிபாகத்தை ஆசிரியர் ஒருவர் நிறைவேற்ற வேண்டுமானால்



தேவசகாயம்றொபேட் சுரேஸ்

இரண்டாம்வருட தமிழ்நெறி

1.மாணவரின் நம்பிக்கைக்கு உரியவராக இருத்தல்.

2.மாணவரின் பிரச்சினைகளை பகிரங்கப் படுத்தாமல் சரியாக தீர்க்க உதவுதல்.

3.தோல்வி நிலைகளை வெற்றியாக மாற்றுதல்.

4.பாடப்புலமை பெற்றிருத்தல்.

5.மாணவரின் கணிப்பு தேவையை அறிந்து பூர்த்தி செய்தல்.

6.வகுப்பறை பௌதீக கட்டமைப்பை மாற்றியமைத்தல்.

7.இறுக்கமான நேரசூசி நடைமுறையை தளர்த்துதல்.

8.மாணவரின் உளவியல் சூழலை இனங்கண்டு மாணவரை ஒருங்கிணைத்தல்.

9.மேற்படி காரணங்களை தொழில் வாண்மையாக்கிக் கொள்ளல்.

என்பன போன்ற விடயங்களில் கவனம் செலுத்துவதன் மூலம் மாணவர்களது கற்றல் சூழலை முகாமை செய்து அச் சூழல்களை ஆசிரியர் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்து மாணவருக்கு கற்பதற்கான வசதி செய்து கொடுப்பவராக தொழிற்பட முடியும்.

.........................................................

## நூற்றாண்டு கலைமலர் வெளியீடு

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் கலாசாலையின் சஞ்சிகையான கலைமலர் நூற்றாண்டு மலராக 11.10.2023 அன்று மலர இருப்பதையிட்டு எமது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**கலாதீபக் குழுமம்**

# The International Day of peace

The International Day of peace or non-violence day is celebrated 20th September 2023. This day is devoted to promote harmony ,understanding and sympathy among all nation and people. The International Day of peace was established by the United Nations has an irony history that takes us back to 1981. The General Assembly declares this day as an opportunity for all people to come together and pledge to peace and non-violence. It was first celebrated on the 3rd Tuesday of September , matching with the opening session of the UN General Assembly.
The aim of this day is to encourage individuals' communities and Nations to take solid actions towards peace is not just the absence of conflict but the presence of justice and equality. The day functions as a sign that we must work together, despite our different backgrounds and beliefs, to build a world free from violence and intolerance.
The United Nation has set out a set of 17 sustainable development goals aimed at dialogue global challenges and making a better world. These goals include issues such as poverty extinction, gender equality, climate actions and access to quality education and health care.
In our daily life, we can practice peace by committed tolerance and respect others, regardless of their background or beliefs. By accepting diversity and supporting inclusivity, we can create an environment where understanding increases and wars find resolution through dialogue rather than violence.
Also peace is indirectly linked to sustainable development. We must be mindful of our impact on the planet and take steps to protect our environment. Climate change and environmental degradation pose significant threats to global stability and by working towards sustainable practices, we protect not only our planet but also the safety of our future generation.
Education plays a crucial role in development a culture of peace by providing access to quality education for all, the equip individuals with the knowledge and skills needed to build a better world. Education empowers people to make informed decisions, challenge preferences and build ties of understanding.



**Mrs.Savurdeen**

**Fathima Risrina**

**First Year English Course**

On this International day of peace, let us restart our commitment to the Global Goals and pledge to take action, both individually and collectively, to create a more peaceful and sustainable world. Collectively, we can overcome the challenges that lie ahead and build a future where all people can live in pride, harmony and prosperity.
To close let us remember that peace begins with each one of us. By accepting, sympathy, kindness and understanding. We sow the seeds of a brighter tomorrow. We shall work in hand, breaking down barriers and supporting dialogue to tie the gaps that separate us. Collectively we can achieve our ambition for global peace and make the world a better place for generation to come. I wish that this International Day of peace, inspire us all to take action for peace and a better world.
The United Nation has set out a set of 17 Sustainable development goals aimed at dialogue global challenges and making a better world. These goals include issues such as poverty extinction, gender equality, climate actions and access to quality education and health care.
In our daily life, we can practice peace by committed tolerance and respect others, regardless of their background or beliefs. By accepting diversity and supporting inclusivity, we can create an
world. Education empowers people to make informed decisions, challenge preferences and build ties
To close let us remember that peace begins with each one of us. By accepting, sympathy, kindness and understanding. We sow the seeds of a brighter tomorrow. We shall work in hand, breaking down barriers and supporting dialogue to tie the gaps that separate us. Collectively we can achieve our ambition for global peace and make the world a better place for generation to come. I wish that this International Day of peace, inspire us all to take action for peace and a better world.

இந்துசாதனம்

DUPLICATE
புதினப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது.

விரோதிஞு (1889) ஆவணிமீ உஉஉ ஆரம்பமானது.

THE HINDU ORGAN.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

| பத்திரிக் கிரயம். | |
|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம்: வருஷம் 1-க்கு | ரூ. 5-60 |
| வெளியூர், இந்தியா | ரூ. 9-40 |
| தேசவெளிப்பகுதி: | ரூ. 9-40 |
| தனிப்பிரதி: | சதம் 6 |

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

| விளம்பர விகிதம். | | |
|---|---|---|
| முதல் முறைக்கு:—ஒருகலம் | | ரூ. 9-40 |
| ,, | அரைக்கலம் | ரூ. 5-00 |
| ,, | கால்கலம் | ரூ. 3-15 |
| ,, | ஒரு அங்குலம் | சதம் 65 |

அடுத்த முறைகட்கு மேவிகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினாலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—கடு. } யாழ்ப்பாணம்:—குரோதிஞு புரட்டாதிமீ சஉ (கஅகூகூ செப்டெம்பர் உ0) வியாழக்கிழமை. { இலக்கம்—உஉ.

கணபதி துணை.

சீர்பூத்த கருவிரு ளணர்ச்சி தேக்கச்
செம்பூத்த கிசமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பரோர் தாங்கப்
பேர்பூத்த வேதாந்தத் தினிது ளாங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானுர் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது
மதம்பூத்த [illegible]

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

ஸ்ராண்டேர்ட்
கொளுக்கியோடுகள்.
(Standard Tiles.)

M. S. MAIDEEN ABDULKADER MARICAR,
& Doctor, T. N. SAMIPILLAI & Co.
MUHIADEEN MEDICAL HALL,
PORTO-NOVO, S. A. Di.

எனது அன்பர்களே. எனது அன்பர்களே.
சற்று கவனியுங்கள். சற்று கவனியுங்கள்.
இனம்! இனம்!!

இந்த லேகியம்போல் பிற வைத்தியர்கள் செய்து கொடுக்கும் பக்ஷத்தில் ரூபா 1000 இனும் கொடுக்கப்படும்.

சிட்டுக்குருவி விரதத்துவ லேகியம்.

எனது அன்பர்களே, சிட்டுக்குருவி லேகியமென்று சிலர் செய்து விற்கிறார்கள். [illegible] இந்த லேகியமானது 1008 சரப்புகளுடைய [illegible]

Telegrams: "APPANNA", Bangalore City

கெ. தி. அப்பண்ணு &
கம்பெனி,
பெங்களூர் நகர்,
(இந்தியா).

பிரசித்திபெற்ற
மைசூர் ஊதுவத்திகள்.

| | ரூ.அ.பை. |
|---|---|
| பன்னீர்வத்திகள் சேர் 1க்கு விலை | 0-12-0 |
| முதல் ரூபா 2-0-0 வரை. | |
| புனுகுவத்திகள் சேர் 1க்கு விலை ரூபா | 1-8-0 |
| முதல் ரூபா 4-0-0 வரை. | |
| மத்தாப்புவத்திகள் சேர் 1க்கு விலை ரூபா | 1-8-0 |
| முதல் ரூபா 3-0-0 வரை. | |
| ஜவ்வாதுவத்திகள் சேர் 1க்கு விலை ரூபா | 5-0-0 |
| முதல் ரூபா 7-0-0 வரை. | |
| கஸ்தூரிவத்திகள் சேர் 1க்கு விலை ரூபா | 5-0-0 |

யாழ்ப்பாணம்

## ஆசிரியர் கல்லூரி.

மிஷனரிமாரும் சைவர்களும் சேர்ந்து இதுகாறும் நடத்திவந்த கோசப்பாய் ஆசிரியர் வித்தியாசாலை வருகிற அக்டோபர் மாசம் 1-ந் தேதி தொடக்கம் அரசினர் பொறுப்பில் எடுக்கப்பட்டு, யாழ்ப்பாணம் அரசினர் ஆசிரியர் கல்லூரி (The Jaffna Training College) என்னும் பெயருடன் வழங்கிவரும். இக்கல்லூரிக் கட்டிடம் வேண்டிய பிரகாரம் அழகுற அமைக்கப்பட் டிருக்கின்றது. வித்தியாதரிசி ஸ்ரீ அ. பொன்னையா அவர்களே இப்பொழுது மேற்படி கல்லூரித் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கின்றனர். ஸ்ரீ பொன்னையா அவர்கள் மேற்படிகல்லூரித் தலைவராகக் கடமை பார்ப்பதோடு யாழ்ப்பாணத்துள்ள மற்றும் ஆசிரியர் கலாசாலை வித்தியாதரிசியுமாக நியமிக்கப்பட்டுள்ளனர். இப்படிப்பட்ட ஒரு கல்லூரி விஷயங்களை நிர்வகித்து நடத்தும் விஷயத்தில் ஸ்ரீ அ. பொன்னையா அவர்களிடத்துள்ள திறமையும் அநுபவமும் உலகப்பிரசித்தமாகும். இக்கல்லூரி முதல் உபாத்தியாயராக ஸ்ரீ S வைரமுத்து அவர்களும், முதல் உதவி உபாத்தியாயகராக மிஸ்றர் மோசஸ் முருகேசு அவர்களும், இரண்டாவது உதவி உபாத்தியாயகராக ஸ்ரீ சி. கா. சிதம்பரப்பிள்ளை அவர்களும், தமிழ்ப் போதகாசிரியராக ஸ்ரீ ம. வே. மகாலிங்கசிவம் அவர்களும் இப்பொழுது நியமனம்பெற்றனர். இக்கல்லூரியின் ஆதாரவித்தியாசாலை சென்ற இருவாரங்கட்குமுன்னர் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது. மிஸ்றர் R குணரத்தினமவர்கள் அவ்வித்தியாசாலைத் தலைமை ஆசிரியராகவும், ஸ்ரீ A கணபதிப்பிள்ளையவர்கள் உதவி ஆசிரியராகவும் நியமனம் பெற்றுக் கடமை பார்த்துவருகின்றனர். "நன்கு ஆரம்பித்தகருமம்பாதிநிறைவேறியதற்குச் சரி" என்னுங் கருத்தமைந்த ஒரு ஆங்கில பழமொழியுண்டு. மேற்படிகல்லூரி வித்தியாசாலைகளின் தலைவராகவும் ஆசிரியர்களாகவும் நியமனம் பெற்றுள்ளோர் சிறந்த கல்வியறிவும், தக்க திறமையும் பெரும் அநுபவமும் வாய்ந்தவர்களாதலினால் மேற்படி கல்லூரியும் வித்தியாசாலையும் ஏனைய வித்தியாசாலைகளுக்கு ஒரு திருஷ்டாந்தமாக மதிக்கப்படும்படி கொண்டு நடாத்தாவரென்பதற்குச் சிறிதுஞ் சந்தேகமில்லை. இக்கல்லூரி வாயிலாக ஆங்கிலக் கல்வியும் ஊட்டுவதற்கு அதிகாரிகள் நோக்கங்கொண்டிருத்தல் சாலவுஞ் சிறந்ததாகும். நமது செந்தமிழ்ப்பாஷையை விருத்தி செய்யத்தக்க பல ஆசிரியர்கள் இக்கல்லூரியிற் பயின்று பரீக்ஷைகளிற் சித்திபெய்தி அதிக திறமையோடு வெளிப்படுவார்களென்பது எமது நம்பிக்கை.

# நிகழ்வுகளின் தொகுப்பு

## ஆங்கிலதின விழா நிகழ்வுகள் 22.09.2023




















# ஆங்கிலதின விழா நிகழ்வுகள் தொடர்ச்சி - 22.09.2023




















